முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 22.08.2025

O.S. 71/2018

வா.சா.1 -ஞானமலர்

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1) வழக்கு சொத்து எந்தெந்த சர்வே எண்களை சேர்ந்தது என்றால் 961/13, 961/2 ஆகும். மேற்படி இரண்டு சர்வே எண் சொத்துகளும் ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கிரேஸ் என்பவருக்கு பாத்தியப்பட்டது. கிரேசின் அப்பா பெயர் அந்தோணி நாடார் என்றால் ஞாபகம் இல்லை.

2) வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்து ஆதியில் அந்தோணிநாடாருக்கு பாத்தியப்பட்டது என்றும் அவர் காலம்சென்ற பிறகு அவரது வாரிசுகளான முதலாவது நபருக்கும் அவரது சகோதரர் சகோதரிக்கும் உரிமைப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

3) அந்தோணிநாடாரின் பிள்ளைகள் பெயர் என்ன வென்றால் ஆல்வின் அம்மையா ஆகும். அந்தோணி நாடாருக்கு சூசைமரியாள், ஜேசு மரியாயி, மரிய புஸ்பம் மற்றும் அம்புரோஸ் ஆகியோர் பிள்ளைகள் என்றால் தெரியாது.

4) பட்டாவில் அந்தோணி நாடார் பெயர் உள்ளது என்றால் சரியல்ல சவரிநாடார் பெயர் உள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் அந்தோணி நாடார் மகன் அப்புரோஸ் உள்ளது என்றால் சரி. அதேபோல் எனது கணவர் பெரும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.4 பட்டாவில் எந்த வருடம் எனது கணவர் பெயர் அதில் சேர்க்கப்பட்டது என்றால் சுமார் 2017 என்று நான் நினைக்கிறேன். புல எண் 961/13 ற்கான பட்டாவை நான் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் இரண்டு சர்வே எண்ணிற்கும் சேர்த்து ஒரே பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ல் புல எண் 961/13 ற்கான பட்டா உள்ளதா என்றால் இல்லை.

5) இதுவரை 961/13 ற்கு பட்டா எண் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டிற்கும் சேர்த்து ஒரே பட்டாவை எடுத்துள்ளோம். 961/13 சொத்து 961/2 ன் கிழக்கு பக்கம் உள்ளது.புல எண் 961/13 ல் வருவாய் ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1.250 சென்று என்று குறிக்கப்பட்டுள்ளது. 961/2 ற்கு எவ்வளவு சென்ட் உள்ளது என்றாலும் அதில் ½ ஏர் என்று குறிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்தோணி நாடாரின் வாரிசுகள் அனைவரையும் கட்டுப்படுத்தி நானோ எனது முன்னோரோ கிரயம்

வாங்கவில்லை என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் அந்தோணி நாடாரின் சகோதர சகோதரிகள் என்று மட்டுமே குறிபிடப்பட்டுள்ளது என்றாலும் வேறு பெயர்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும் அவர் தற்போது உயிரோடு இல்லை. வழக்கு தாக்கல்செய்யும் முன்பும் அதற்கு பின்னரோ அந்தோணி நாடாரின் வாரிசுகள் யார் என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை.

7) அந்தோணிநாடாரின் சொத்தில் அந்தோணிநாடாரின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரி. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள இரண்டு சர்வே எண்களில் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் சொத்து என் கைவசம் உள்ளது என்றால் 961/13 ல் 1.8 செண்ட் எனவும், 962/2 ல் 450 இருக்கும். அது சதுர அடியா சதுர லிங்சா என எனக்கு தெரியாது. எனது சொத்திற்கு தெற்குபக்கம் பிரதிவாதியின் சொத்துகள் இருக்கிறது என்றால் சரி.

8) பிரதிவாதியின் சொத்தில் காம்பவுண்டு உள்ளது என்றால் உள்ளது. அது எங்கள் சொத்தில் உள்ளது. அதில் கேட் அமைத்துள்ளார். பிரதிவாதியின் காம்பவுண்ட் சுவர் என்னுடைய இடத்தில் எவ்வளவு நீளத்தில் எவ்வளவு அகலத்தில் உள்ளது என்றால் தெரியாது. எனது சொத்தின் கிழக்கு எல்கையில் இருந்து மேற்கு எல்கை வரை நீளமாகவும், ஆனால் அகலம் குறித்து எனக்கு தெரியாது.

9) ஆக்ரமிப்பு என்பது என்னுடையசொத்திற்கும் பிரதிவாதியின் சொத்திற்கும் இடையில் பகுதியா என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்த போது பிரதிவாதி எந்த இடத்தை ஆக்ரமிப்பு செய்ததாக சொல்லியிருந்தேன் என்றால் 961/2 ல் சொல்லியிருந்தேன். எனது வழக்கில் 961/2 ல் உள்ள ஆக்ரமிப்பை அகற்ற கோரி பரிகாரம் கேட்டிருந்தேன் என்றால் சரி. நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்ட போது நான் உடன் இருந்தேன்.

10) பிரதிவாதி ஆக்கரமிப்பு செய்ததாக உள்ள இடத்தை நான் நீதிமன்ற ஆணையருக்கு காண்பித்து கொடுத்தேனா என்றால் எனது பத்திரப்படி அளந்தார்கள். 961/2 புல எண்ணின் மேற்கு பக்கம் தேவதாஸ் மற்றும் பெர்னால்டின் சொத்துகள் உள்ளது. தேவதாஸ் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் சரி. தேவதாசிற்கு மேற்கு பகுதியில் எவ்வளவு சொத்து விஸ்தீரணம் உண்டு என்றால் மொத்தம் நான்கு பங்கில் மூன்று பங்கு எங்களுக்கும் ஒரு பங்கு பிரதிவாதிக்கும் என்று சொல்வார்கள்.

11) எனது கிரயம் ஆவணத்தில் மூன்று பங்கு நாங்கள் விலைக்கு வாங்கியதாகவும் ஒரு பங்கு தேவதாசிற்கும் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கிரயதாரர்கள் என்னிடம் அவ்வாறு சொன்னார்கள். வா.சா.ஆ.5 ஆவணத்தை யார் தயார் செய்தது என்றால் அது பத்திரத்துடன் உள்ள ஆவணம் ஆகும். அதை யார் தயார் செய்தது என்றால் தெரியாது.

12) வா.சா.ஆ.5 ஆவணத்தில் நீளம் அகலம் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. அதில் சர்வே எண்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரிடம் வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி அளவீடு செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்தேனா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்தவித வரைபடமோ இல்லை என்றால் சரிதான் ஏற்கனவே இருந்தது.

13) எனது வழக்கு பட்டிகை சொத்திற்கு வடக்கு பக்கம் தார் சாலைஉள்ளது என்றால் சரி. தார்சாலைக்கும் எனது இடத்திற்கும் எவ்வளவு துாரம் இடைவெளி உள்ளது என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்தை வாங்குவதற்கு முன்பாக நானும் எனது கணவரும் சொத்தை சென்று பார்வையிட்டோமா என்றால் பார்வையிட்டோம். அப்போது பிரதிவாதிகளின் இடத்திற்கு செல்ல பாதை இருந்ததா என்றால் இருந்தது. அது சிறிய பாதையாக இருந்தது.

14) அந்தோணிநாடாரின் வாரிசுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தாமல் கிரயம் வாங்கியயுள்ளதால் எனக்கு தாவா சொத்தில் முழுஉரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற 3 வாரிசுகளுக்கு ஒவ்வொருவருக்கும் தனிதனியே எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் தெரியாது. நான் கிரயம் வாங்கும் போது தாவா சொத்தின் மேற்கு பக்கம் வேலி ஏதும் இருந்ததா என்றால் இல்லை. ஒரே கிடப்பாக இருந்தது. எந்த தேதியில் நான் கிரயம் பெற்றதாக சொல்லும் வழக்கு ஏ பட்டிகை சொத்து தனியாக பிரிக்கப்பட்டது என்றால் 2017 ல் பட்டா எடுத்தோம் 2014 ல் பிரித்துவிட்டோம். 2014 ல் சர்வேயர் வந்து அளந்து கொடுத்தார். ஏ பட்டிகை சொத்திற்கு தற்போதும் வேலி இல்லமல் அதன் மேற்கு பக்க சொத்தோடு சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்டு சுவர் கட்டி பாதை அமைத்துள்ளார்கள். மேற்கு பக்க சொத்தில் காம்பவுண்டு கட்டியுள்ளார்களா என்றால் இல்லை. தென்மேற்கு பக்கம் . நீதிமன்ற ஆணையரிடம் தென்பக்கம் உள்ள காம்பவுண்டு சுவரை காண்பித்து கொடுத்தேனா என்றால் அவர்களே பார்த்துவிட்டார்கள். தாவா ஏ பட்டிகை சொத்தில் நான் முழு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல 2 தென்னை மரங்களில் காய் வெட்டிவருகிறேன். தெற்கு பக்கம் உள்ள பிரதிவாதியின் சர்வே எண் 961/3 ல் காம்பவுண்டு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. தென்னைமரங்களில் இருந்து காய் வெட்டுவதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வரைபடம் கற்பனையானது என்றாலும் உண்மை சங்கதிகள் மறைக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. உரிய தரப்பினரை சேர்க்காததால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா பி பட்டிகை சொத்தின் மீது என் உரிமையை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து அழகப்பபுரம் வில்லேஜ் கிராமம் என்று பிராதில் நான் குறிக்கப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான்.

அதனை நான் திருத்தம் செய்துவிட்டேன். பிராதில் நான் விளம்புகை பரிகாரம் கேட்க உரிமையில்லை என்றாலும் வழக்கு பட்டிகை சொத்தில் முழு உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. வழக்கு பி பட்டிகை சொத்தில் பிரதிவாதிகள் ஆக்ரமிப்பு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டிருக்கும் ஆக்கரமிப்பு இடமும் நான் பி பட்டிகை சொத்தில் குறிப்பிட்டிருக்கும் ஆக்ரமிப்பும் வேவ்வேறானவை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல்செய்திருக்கும் வரைபடத்தை மற்றும் அறிக்கையை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். பிரதிவாதிகள் ஆக்கரமிப்பு செய்யவில்லை இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.